தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திரு. க. சேதுராமலிங்கம்

ந.க. அ4/1235069-8895/2023 நாள் 23.10.2024

பொருள் : பொதுப்பணிகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – நேரடி நியமனம் – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – IV (தொகுதி IV) – இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டது – பட்டியல் வரப்பெற்றது – பணியிடம் வழங்கப்பட்டது – தமிழ் வழிச் சான்று மெய்த்தன்மை அறிக்கை வரப்பெற்றது – பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

படிக்கப்பட்டவை :

1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலர் அவர்களின் கடித எண் 1829/PSD-D1/2022 நாள் 17.08.2023.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க. அ4-1235069-8895-2023 நாள் 20.09.2023.
3. சென்னை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணி திட்டம்) செயல்முறைகள் ந.க. 030574/ எம் /இ1/2021 நாள் 22.04.2024
4. தூத்துக்குடி முதன்மை கல்வி அலுவலர் கடிதம் ந.க எண் 2308-அ6-2024 நாள் 09.08.2024
5. விருதுநகர், முதன்மை கல்வி அலுவலர் கடிதம் எண் ஒ.மு எண் 03232-அ5-2024 நாள் 04.10.2024
6. தொடர்புடைய ஆவணங்கள்.

----

**ஆணை**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான போட்டித்தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2-ல் கண்ட செயல்முறை ஆணையின்படி, தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்க்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களது தமிழ் வழிச் சான்று மெய்த்தன்மை குறித்த அறிக்கை பார்வை 4 மற்றும் 5-ல் காணும் கடிதங்களில் வரப்பெற்றதைத் தொடர்ந்து, தனியர்களது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்க்கண்டவாறு அவர்களுக்கெதிரே கலம் 4-ல் குறிப்பிடப்பட்ட நாளில் **"தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி IV நியமனங்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையாக உள்ள வழக்குகளின் முடிவுகளுக்குட்பட்டு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது."**

| வ.எ. | பெயர் பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | E. சதீஸ்குமார்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>எட்டையாபுரம். | 03.10.2023 மு.ப. | 03.10.2023 மு.ப. |
| 2 | R. செல்வி,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>தனிவட்டாட்சியர (ஆ.தி.ந)<br>அலுவலகம்,<br>கோவில்பட்டி. | 03.10.2023 மு.ப. | 03.10.2023 மு.ப. |

ஒம்– க. சேதுராமலிங்கம்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
தூத்துக்குடி.

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர்கள்

நகல்:

1. வட்டாட்சியர், எட்டையாபுரம்
2. தனிவட்டாட்சியர (ஆ.தி.ந) அலுவலகம், கோவில்பட்டி.

   -- தனியர்களின் பணிப்பதிவேட்டில் இவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை குறிப்பிட்டு பதிவுகள் மேற்கொள்ள.
3. அ4 இருப்புக் கோப்பு
4. உபரி 1

ஆ.ப.அ.ப.

அலுவலக மேலாளர் (பொது)